
# சிந்தனை

தை - மாசி

SINTHANAI 1/90 Jan-Feb. 1990





எம்.லயனல்



எச்.எம்.ரஞ்சித்

சமர்ப்பணம்

தமது தொழிற்சாலையில் நியாயப் போராட்டம் நடத்தியதற்காக ஸ்ரீலங்கா அரசின் பாசிச பொலிசாரினால் கடத்தப்பட்டு சுட்டெரிக்கப்பட்ட எமது தோழர்களான லயனல், ரஞ்சித் ஆகியோருக்கு இந்த இதழை கண்ணீர் அஞ்சலிகளுடன் சமர்ப்பிக்கின்றோம்.

## உங்களுடன் சில வார்த்தைகள்...

தமிழ் மக்களின் இருள் சூழ்ந்த, நிட்சயமற்ற நிகழ்காலம்.... இன்னும் தொடர்கின்றது. அரசபயங்கரவாதமும் அராஜகத்தின் அடாவடித்தனங்களும் இன்னுமும் அகலவில்லை. நாட்டில் இன்னும் தொடரும் கடத்தல்கள், சித்திரவதைகள், கொலைகளுக்கெதிராக, இலங்கையின் 42வது "சுதந்திர தின"த்தின் மறு நாள் (5.2.90) பொண் நகரில் ஸ்ரீலங்கா தூதுவராலயத்திற்கு முன் இலங்கையின் சகல சமூகத்தவரும் ஜேர்மனியர்களும் கலந்து கொண்ட மறியல் போராட்டம் நடைபெற்றது. மறியல் போராட்டத்தில் இடம் பெற்ற சுலோக அட்டைகள் எமது அட்டையில் இடம் பெற்றுள்ளன.




கொழும்பு தமிழ்ச்

தை - மாசி 1/90 1990


பொன்னம்பலம் ராமனாதன் காலம் தொட்டு இன்று வரை - ஜீ.ஜீ.பொன்னம்பலம், டி.எல்.சேனநாயகா கூட்டு; செல்வநாயகம், டட்லி சேனநாயகா கூட்டு.....இப்படியாக - தமிழ்த் தலைமைகளுக்கும் சிங்கள ஆளும் தலைமைகளுக்குமிடையில் ஏற்பட்ட கூட்டுக்களெல்லாம் தமிழ் மக்களின் கண்களில் மண்ணைத் தூவி அவர்களின் உரிமைகளைப் பறிப்பதற்குப் பாவிக்கப் பட்டனவேயன்றி அவர்களின் சுதந்திர அபிலாஷைகளை நிறைவேற்ற உதவவில்லை.

இக் கூட்டுக்களின் போதுதான், பத்து லட்சம் மலையக மக்களின் உரிமைகள் பறிபோயின, மொழி, நிலம், உடமைகள் பறிபோயின! ஆனால் இந்தக் கூட்டுக்களால் நன்மைகள் பெற்றது சிங்கள ஆளும் வர்க்கங்கள்தான். அதே வேளையில், கிடைக்கும் ஏற்றுமதி, இறக்குமதி "லைசன்சுகள்", தங்க, பீடி "பேர்மிட்டு"க்கள், ஏனைய 'ரொட்டித் துண்டு'களுக்குமாக - யாழ்ப்பாண குட்டி முதலாளிகள் - தம் சொந்த நலன்களுக்காக -

இவர்களைத் தமது தலைவர்களாக வைத்துக் கொண்டார்கள். இந்தக் கூட்டுக்களினால் சாதாரண மக்களின் வாழ்க்கைத் தரங்களை உயர்த்தவோ அல்லது ஏனைய உரிமைகளைப் பெறவோ, இந்தத் தலமைகளினால் முடியவில்லை!
இன்று வரலாறு மீண்டும் திரும்பியுள்ளது. மீண்டும் சுயநலன்களுக்காக ஒரு பிரேமாதாசா - விடுதலைப்புலிகள் கூட்டு ஏற்பட்டுள்ளது. உங்கள் பகுதிகளில் நீங்கள் சுரண்டுங்கள், எங்கள் பகுதிகளில் நாங்கள் சுரண்டுகிறோம் என்ற சண்டியர்களின் ஒப்பந்தமும் உருவாகியுள்ளது. முதலாளிகள், வட்டிக்காரர், பல் முதலாளிகள், "பேர்மிட்,லைசன்ஸ்"காரர்கள், மில் முதலாளிகள்... இப்படியான தமிழ் மேல் மட்டங்கள் யு.என்.பி - புலி கூட்டை கைதட்டி வரவேற்கின்றன.
நாட்டின் சாதாரண சட்டங்களே கேலிக் கூத்தாக்கப் பட்டு விட்டன. மாகாண சபைகளுக்கு வரிவிதிக்கும் உரிமை கொடுக்க சட்டப் புத்தகங்களைப் புரட்டியவர்கள் கப்பம் வாங்குவதை கண்மூடி அனுமதிக்கின்றனர்! அமிர்தலிங்கத்தின் கொலைக்கு உரிமை கோரியவர்களுக்காக அரசாங்க மந்திரியே வக்காலத்து வாங்குகின்றார்!! ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்துவிட்ட இயக்கம் துப்பாக்கி முனையில் தனது பண்புகளை எடுத்துக் காட்டுகின்றது.
மக்களால் தெரிவு செய்யப்பட்ட மாகாணசபைப்



பிரதிநிதிகள் ஜோர்ஜ் தம்பிராஜா, மன்சூர் ஆகியோர் படுகொலை செய்யப் பட்டுள்ளனர். முன்னாள் அமைச்சர் கணேசலிங்கம் கோழைத்தனமாக கொலை செய்யப் பட்டுள்ளார். வாலைப் பிடித்துத் திரிந்த ஈரோசின் பாராளுமன்ற அங்கத்தவர்கள் பதவிவிலகுமாறு நிர்ப்பந்திக்கப் பட்டுள்ளார்கள். மக்களின் வாக்குரிமைக்கு அவர்கள் காட்டும் மதிப்பு இது!
முஸ்லிம் மக்கள் மீதான புலிகளின் துன்புறத்தல்கள் - வடக்கு கிழக்கு மாகாணங்கள் ஒன்றிணைவதைத் தடுக்கும் பிரேமதாசாவின் சதியாக - நாடுமுழுவதும் எதிரொலிக்கின்றன. மகுதிகளில் கப்பம் வாங்கப் படுகின்றது. துன்புறுத்தல்களுக்கெதிராக ஊர்வலம் சென்ற முஸ்லீம் மக்கள் மீது குண்டு வீச்சு, துப்பாக்கிச் சூடு. மக்களின் ஊர்வலம் போகும் உரிமையை அவர்கள் அங்கீகரிககும் விதமிது!! குமுதினிப் படகுக் கொலையாளிகள் வெட்கித் தலைகுனியும் வகையில் நடுக்கடலில் பெண்களையும் குழந்தைகளையும் படகுகளோடு எரித்துப் பயங்கரவாதம் புரிகிறார்கள்.....இன்னும் பட்டியல் போட்டுக் கொண்டு போகலாம். இவைதான் ஜனநாயக நீரோட்டத்தில் கலந்துவிட்ட இலட்சணமாக உள்ளது.
சிங்கள முதலாளித்துவத்திற்கும் தமிழ் முதலாளித்துவத்திற்கும் இடையிலான உறவுகள்


என்றும் நேர்மையானவைகளாகவோ, நிலையானவைகளாகவோ இருந்ததில்லை. அவர்களுக்கிடையிலான முரண்பாடுகள் வெடிக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அதற்குப் பலியாவதும் சாதாரண தமிழ் மக்கள்தான்.

வெளிநாட்டு, உள்நாட்டு முதலாளித்துவங்களின் தேவைக்கமைய இன்று ஏற்பட்டிருக்கும் இந்தக் கூட்டையும், தமது அதிகாரங்களை பாசிச நடவடிக்கைகளுக்கூடாக நிலைநிறுத்த எடுக்கப்படும் முயற்சிகளையும், சகல முற்போக்கு சக்திகளும் ஐக்கியப்பட்ட தந்திரோபாய நடவடிக்கைகளினால் எதிர் கொள்ள வேண்டியது அவசியமாகும்.

இன்று வாய் மூடி இருக்கும் மக்களும் சிந்திக்கின்றார்கள். அவர்கள்தான் இறுதி முடிவுகளைச் செய்வார்கள். சிலரைப் பல காலம் ஏமாற்றலாம். பலரைச் சில காலம் ஏமாற்றலாம். ஆனால் எல்லோரையும் எல்லாக் காலத்திலும் ஏமாற்ற முடியாது.

**சிந்தனையில் வெளியாகும் கையெழுத்துடன் கூடிய ஆக்கங்களின் கருத்துக்கள் அவற்றை ஆக்கியோரின் சுதந்திரமான கருத்துக்களேயாகும்.**
**-ஆசிரியர்குழு.**





-உதயன்-

அலுவலகங்கள்
தொழிற்சாலைகள்
அவசரமாக இயங்கியும்
பொருளாதாரம்
எங்களைத் தின்கிறது...

விலைவாசிக்கு
ஒவ்வோர் ஆண்டும்
புதிய இறக்கைகள்
அதற்கு
எமது பணப்பையே
அடிக்கடி பசிக்கும்...

நிதிஅமைச்சருக்கென்ன
துண்டு விழுகிறதென்பார்
இப்போது
எமக்கிருப்பதோ
கோவணத்துண்டு மட்டுமே!

அவர்கள்
பொது எதிரி
நோயாளியாக ஆசைப்பட்டார்கள்
போக்குவரத்து
தொலைதொடர்பு
தொழிற்சாலை அலுவலகங்கள் என
காயப்படுத்தினார்கள்
புரட்சி என்று
பெயர் சொன்னார்கள்...

இப்போது
நோயாளிக்கட்டிலில்
விழுந்து கிடப்பது
நாட்டின் பொருளாதாரமும்
நாங்களும் தான..

வேள்வியில்
வெட்டப்படும்
பலி ஆடுகளைப் போலவே
தலைமைகளுக்காக...

சாணக்கியப் பரீட்சையில்
பொது எதிரி
தேறிவிட்டான்
ஆனால் நம்மவர்கள்
ஆயுதக் கிடங்குகளில்
இருப்புக் குறைந்ததாம்
உழைக்கும் ஒவ்வொரு தலையும்
பத்து விகிதவரி
யார் சொன்னது
மன்னர் ஆட்சி முடிந்துவிட்டதென்று
இல்லை இல்லை
இல்லவேயில்லை...

# எருமைக் கூட்டம்

— சிறுகதை —



சிங்கள மொழி மூலம்

—— காமினி தன்வத்த ——

ஹொரண வீதியின் மத்தியில் அமைத்திருக்கிறது உடுமுல்லை மயானம். அங்கே கைவிடப்பட்ட நிலையிலிருந்த பாழடைந்த கட்டிடமொன்றை மரங்களும், புற்களும் தாராளமாய் வளர்ந்து மறைத்துக்கொண்டிருந்தன. பார்ப்பதற்குப் புராதன காலத்து நகரம் போல அது காட்சியளித்தது. அங்குமிங்கும் பரவலாக அமைந்திருந்த சமாதிகளில் இறந்தவர்களின் பிறந்த, இறந்த திகதிகள் பொறிக்கப்பட்டு உலகத்தவருக்கு உணர்த்திக்கொண்டிருந்தன.

ஒரு கிழ எருமை தலமை தாங்க, தார்றோட்டால் நடந்து வந்த எருமைக்கூட்டமொன்று மயானத்திற்குள் பிரவேசித்தது. அக்மன் அய்யாவுக்குச் சொந்தமான இவ்வெருமைகள் உள்நுழைந்ததும்



இருபகுதிகளாகப் பிரிந்து நின்று அங்கே வளர்ந்திருந்த புற்களை சப்தமிட்டவாறு மேயத்தொடங்கின. பரவலாக வளர்ந்திருந்த புற்கள் தனது எருமைகளின வயிற்றை நிரபபுவதையும் அவை சந்தோஷமாக உண்பதையும் மகிழ்ச்சியுடன் பார்த்துக் கொண்டிருந்தார் அக்கமன்அய்யா. தனது பழைய குடையை விரித்தபடி நிலத்தில் அமர்ந்துகொண்டார்.

வழக்கம்போலவே கழுத்தில் துண்டு, கோடிட்ட பழையசட்டை, மடித்துக்கட்டிய சாரம், அக்மன்அய்யா எப்பொழுதுமே இதே மாதிரித்தான். அவருடைய தோற்றம் வழக்கத்தை மீறாது.

நெற்றியில் வெள்ளைப்புள்ளி வைத்த இளம் எருமையொன்று சீக்கிரத்தில் கன்று ஈனும் கருவாயிலிருந்தது. தன்னுடைய எருமைகளின் முன்னேற்றம் பற்றி தீவிரமாக சிந்திப்பவர் அக்மன்அய்யா. தன்னுடைய வாழ்க்கையின் சிரமங்களைச் சிந்திக்கும்போது இப்பொழுதைப்போல் அவரது வாய் வெற்றிலையைக் குதப்பிக்கொண்டிருக்க, அவர் ஏதோ ஒரு யோசனையில் ஆழ்ந்திருப்பார். இது அவர் வழக்கம்.

இப்பொழுது கோடைக்காலம். வெகுவிரைவில் அறுவடை ஆரம்பித்துவிடும். வயல்களில் முற்றிய நெற்கதிர்கள் அறுக்கப்பட்டபின், எருமைகளை அங்கே உழுவதற்கு விடவேண்டும். பிறகு பிரச்சனையில்லை இரைதேடி அவை வெகுதூரம் அலையவேண்டிவராது வயலிலேயே எல்லாம் கிடைக்கும். வயல் சொந்தக்காரர் உழுவதற்கு கூலியாக கொடுக்கும் பணம் அக்மனின் சம்பாத்தியம்.

அந்தக்கூட்டத்தில் இருந்த முப்பது எருமைகளும் அக்மன்அய்யாவின் வாழ்வில் ஒரு பகுதியாகவும் ஒரே சொத்தாகவும் இருந்தன. நடுத்தர வயதைத்தாண்டிய அவருக்கு, எல்லாமே அந்த எருமைகள் தான்.

தன்னுடைய வீட்டிற்கருகிலுள்ள 2 ஏக்கர் காணியில் எருமைகளை கட்டிவைப்பார். அவருடைய நேரத்தை இரவும் பகலுமாய் அவற்றைப் பாதுகாப்பதிலும் கவனிப்பதிலும் செலவிடுவார்.

"பரல்,பரல்" என்ற சத்தத்துடன எருமைகள் செழித்து வளர்ந்திருந்த புற்களைத் தின்றன.

ஹொரண பஸ், தார்றோட்டால் வரும் சத்தம் அண்மையில் கேட்டது. தெருவிற்கு வந்து மேய்ந்துகொண்டிருந்த சில கன்றுகளை, ஓடிவந்து உள்ளே துரத்திவிட்டார்.

"ஓகோ! ஓகோ! பிட்! பிட், வள்ளி இங்கே வா? என்று எறுமைகளுக்கு விளங்கும் பாசையில் உரத்துக் கத்தியவாறு அவற்றைக் கட்டுப்படுத்தி எல்லா எருமைகளையும் ஒன்றாய்ச் சேர்த்துவிட்டார். இந்த மயானத்திற்குக் கொஞ்சம் தள்ளி அப்பால் அமைந்திருக்கும் இறப்பர் தோட்டமும், பிறகு பீட்டர் வாத்தியாரின் தென்னந்தோப்பும் எருமைகள் அடுத்து மேய வேண்டிய இடங்கள்.

மயான மூலையிலிருக்கும் சிறிய ஒழுங்கையிலிருந்து ஆரோன்அய்யா வெளிப்பட்டார். அவரைக் கண்டதும் இவர் கதையைத் தொடங்கினார்.

"எப்படியடாப்பா சுகங்கள், கண்டு கனகாலம்"

"நான் உந்தக் கடையடிக்குப் போகிறேன் மனுசிக்கு கொஞ்சம் கொத்தமல்லியும் பின்னேரத்திற்கு ஒரு றாத்தல் பாணும் வாங்க வேணும்."

"அகி அக்காவிற்கு மூன்று நாளாய்த் தலைவலியும், நாரியுளைவும் ....காலையில சுகமாயிருக்கும் பின்னேரத்திற்குப் பிறகு கூடும்."

"ஏன் ஆஸ்பத்திரியில் மருந்து எடுக்கவில்லையா?" அக்மன்அய்யா இடையில் கேள்வி கேட்டார்.

"அரசாங்க ஆஸ்பத்திரியா? அங்கே இப்ப மாதக்கணக்காய் மருந்துகொடுப்பதில்லை"

"சே.. இப்படியும் ஒரு காலம் வந்ததே. எங்கட காலக்கஷ்டத்திற்கு ஊர் பரியாரியாரும் செத்துப்போய்விட்டார்"

"எங்கட பெடியன் உயிரோட இருந்திருந்தாலாவது ஹொரணக்கு அனுப்பி கொஞ்சம் மருந்து எடுப்பித்திருக்கலாம். எல்லாம் எங்கட நேரம். அவனும் இராணுவத்தில் சேர்ந்து இல்லாமல் போயிட்டான்."

"சுனிமலுக்கு உண்மையில் என்ன நடந்தது?"

மீண்டும் அக்மன்அய்யாவிடமிருந்து கேள்வி.

"நாங்களும் எவ்வளவோ சொல்லிப் பார்த்தோம். கேட்டால் தானே. அவனும் மூக்குக்கு அங்கால பார்க்காதவன். இந்தக்காலத்தில் கட்சிக்கு வேலை செய்து எம்.பி. மாருக்குப் பின்னால் திரிந்தால்



தான் ஆமி உத்தியோகமும் கிடைக்கும். இராணுவத்தில் சேர்ந்து எட்டு மாசந்தான் இன்றுவரை அவன்ர சாம்பல் கூட எங்களுக்குக் கிடைக்கவில்லை."

"சரி.. இனிக் கவலைப்பட்டு என்ன ஆகிறது. எத்தனை ஆயிரம் பேருக்கு இப்படி நடந்திருக்கும்."

சிறிது நேரம் இருவருக்கிடையில் மௌனம் நிலவியது.

"நான் உன்னைக் கேட்க வேண்டுமென்றுதான் இருந்தேன். உனக்கு நேரமிருந்தால் என்னோட வயல் வேலைக்கு வரமுடியுமே"

"அதுவும் நல்லது. வருகிற மாசத்திலேயிருந்து ஒரு வேலை செய்யலாம் என்றுதான் நானும் இருந்தேன்."

"நான் எதற்கும் பொழுதுபட்ட பின்பு அங்கால வரப்பார்க்கிறேன். அப்ப ஆறுதலாய்க்கதைக்கலாம்"

"சரி. எனக்கும் இருட்டி விட்டுது. அப்ப நான் வாறன்"

அரோன்அய்யா ஒழுங்கையால் நடந்து உடுமுலைச்சந்திவரை சென்று மறையும்வரை அக்மன்அய்யா பார்த்துக்கொண்டிருந்தார்.

திரும்பிப் போகும் வழியில் இருந்த இறப்பர் தோட்டத்தின் வழியாக மேய்ந்தபடி சென்று கொண்டிருக்கும் எருமைகளுடன் நடந்துகொண்டிருந்த அவர் தனக்குத்தானே கதைக்கத் தொடங்கினார்.

"உண்மையில் இந்த அரசாங்கத்திற்கும் இந்த எருமைக்கூட்டத்திற்கும் வித்தியாசமில்லை. நிலத்தில் செழித்து வளரும்ஒவ்வொரு பயிரையும் மென்று தின்பதும், சாணம் போடுவதும் மாத்திரம்தான். இதைத்தவிர வேறு ஒன்றையும் பெரிதாய் செய்வதாய் எனக்குத் தெரியவில்லை. எதற்கும் அறுவடைக்காலம் வரட்டும். நல்லா வேலை வாங்கத்தான் போகிறேன்"

முன்னால் சென்று கொண்டிருந்த எருமையொன்று தென்னங்கன்றொன்றை தின்னத் தொடங்கியதைக்கண்டவுடன், அதை அடித்தவாறே மேற்சொன்னவற்றை அவர் சத்தம் போட்டுக் பேசிக்கொண்டிருந்தார்.

எருமைகளை அவற்றின் தங்குமிடத்தில் அடைத்துவிட்டு, கடிக்கும் நுளம்புகளை கையால் அடித்துக்கொன்றபடி, பசித்திருந்த வயிற்றுக்குச் சுடச்சுட கொஞ்சம் சோறு சாப்பிடும் யோசனையுடன் வீட்டிற்குள் நுழைந்தார் அவர்.

# வெள்ளப்பெருக்கு

—— விக்னே பாக்கியநாதன் ——

மேகம் இருள
காற்று வீசியே....
பூமியை நனைத்திட
மழையெனும் மாது
குணங்குறிகளுடனே
நீரினைச் சொரிகின்றாள்.
அந்த நீரிலே
உயிரினம் தாவரம்
தாகம் தீர்த்து
வாழ முனைகின்றன.
இங்கே,
ஏழைத்தொழிலாளியின்
மனம் இருள
சோக மூச்சு காற்றென வீசிட
கண்ணீரெனும் தண்ணீரால்
கண்கள் எனும்
இரு குளம் நிரம்பி
நீண்ட நதியென ஓடிட
அந்நீரிலே தான்
ஆட்டிப்படைக்கும் ஆசாட பூபதிகள்
மனித சக்தியை விழுங்கும் மானிடர்கள்
சுக போகித்து
திளைத்து வாழ்கின்றனரோ?
மழை நீருக்குப் பருவ காலம் உண்டு-ஆனால்
ஏழையின் கண்ணீரில்
எப்போதுமே வெள்ளப் பெருக்கு.



# அகிலம்

## மன்டேலாவின் விடுதலை



விஞ்ஞானிகளே
வைரம் தான் வன்மையென
எத்தனை தடவை வேண்டுமானாலும்
சொல்லிக் கொள்ளுங்கள்
அது தன் விடுதலைக்காய
இனவிடுதலையை பலியிடாமல்
இருபத்தேழு வருடங்களாக
இறுகிப்போன
இந்த கறுப்பு இதயத்தின்
நிழல் பட்டு நொறுங்குவதை
காணும்வரை _
வைரம் தான் வன்மையென
எத்தனை தடவை வேண்டுமானாலும
சொல்லிக்கொள்ளுங்கள்.....சு.முரளிதரன்

நெல்சன் மன்டேலா11.2.90 அன்று மாலை, தென்னாபிரிக்க நிறவெறி அரசின் ஆயுட்காலச்சிறையிலிருந்து விடுதலையானார்.71 வயதான மன்டேலா இருண்டகண்டத்தின் கறுப்பினமக்களை

சிறுபான்மைவெள்ளையர்களின் நிறவெறி ஒடுக்குமுறையிலிருந்து விடுவிக்கும் போராட்டத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டகாரணத்திற்காக கம்பிகளுக்குப்பின்னால் சிறையிருளில் அவர் கழித்தது இருபத்தியேழு ஆண்டுகள்.

ஆட்சியளர்களினால் குற்றம் சாட்டப்பட்டு1962 இல் கைது செய்யப்பட்டு விசாரணையின் பின் 1964 யூன் 12 அன்று மற்றும் ஏழு விடுதலைப்போராளிகளுடன் சிறையிலடைக்கப்பட்டார்.

பல தசாப்தங்களாக பலவடிவங்கள் பெற்றுத்தொடர்ந்த தென்னாபிரிக்க அரசின் இனவொடுக்குமுறைகள், மனிதநாகரிகத்திற்கு விடப்பட்ட சவால்களாய் திகழ்ந்தன.

மனிதவுரிமை மீறல்கள் மனிதாபிமானத்தை மையமாகக் கொண்ட விடுதலையுணர்வுகளைத் தோற்றுவித்தன.

ஆட்சியாளர்களினால் திணிக்கப்ப பட்ட அவல வாழ்க்கை பரந்துபட்ட கறுப்பின மக்களின் போராட்டக் கலாச்சாரத்தை உருவாக்கிவிட்டது.

வெகுஜனத்தளங்களாக விரிவு பெற்ற போராட்டமும், ஒடுக்கப்பட்ட மக்களின் அர்ப்பணிப்புகளும், வீரமும், தியாகங்களும் ஒடுக்குமுறைக்கெதிரான மாபெரும் தேசிய விடுதலைப் போராட்டத்திற்குரிய அனைத்து குணாம்சங்களையும் கொடுத்தன.

தேசிய உணர்ச்சியானது, திசைமாறிப்போய் மேலாதிக்க, இனவாதப்போக்குகளாய் பரிணாமம் பெறும் தீயவாய்ப்புகள் வரலாற்றில் நிகழ்வதுண்டு. ஆனால் "வெள்ளையர் ஆதிக்கத்திற்கெதிராக நாம் போராடும் அதே வேளை அங்கு கறுப்பின மக்களின் மேலாதிக்கம் உருவாகுவதையும் கடுமையாக எதிர்க்கிறோம்." என்ற மண்டேலாவின் உயரிய கருத்து ஆபிரிக்கத் தேசிய காங்கிரசின் (A.N.C)யின்



போராட்டச் செயற்பாடுகளின் போது கடைப்பிடிக்கப்பட்டமை உண்மையான தேசிய விடுதலைப் போராட்டத்திற்குரிய சிறந்த எடுத்துக் காட்டாக விளங்குகின்றன.

மண்டேலாவின் விடுதலை சம்பந்தமான சர்வதேச நிர்ப்பந்தங்களும், நெருக்குவாரங்களும் ஏற்பட்டபொழுது அவரின் விடுதலையையும் தமக்கு இலாபம் தரக்கூடியவகையில் பேரம் பேசிய ஆட்சியாளர்கள் போட்ட நிபந்தனைகளையும், சலுகைகளையும் நிராகரித்தார் மண்டேலா.

"இன ஒடுக்கல் போரட்டத்தின் முடிவின் ஆரம்பம் கண்ணுக்குத் தெரிகிறது. ஆனால் எனது விடுதலைப்போராட்டத்தை தளர்த்துவதற்கான தருணம் இது என்று அர்த்தப்படாது" என்று விடுதலையின் குரலாய் ஒலிக்கிறது தியாகத்தின் குறியீடான மண்டேலாவின் குரல்.

– காளிதாஸ்





# சோசலிசம் செத்துவிடப் போகிறதா?

சோவியத் ருசியாவிலும் மற்றும் கிழக்கு ஐரோப்பிய கம்யூனிஸ்ட் நாடுகளிலும் இன்று ஏற்பட்டு வரும் மாற்றங்கள் பலர் மத்தியில் பல விதமான குழப்பங்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன. 60 வருடங்களுக்கு மேலாக ருசியக் கம்யூனிஸ்ட் கட்சி அதிகாரிகளினது ஆட்சியையும், பின்பு சீனாவையும் கம்யூனிச சுவர்க்கங்களாக விபரிப்பதுதான் "மார்க்சியம்" என்று எண்ணிக்கொண்டிருந்தவர்களுக்கு இன்று ஏற்பட்டுவரும் மாற்றங்களுக்குத் தகுந்த காரணங்களைக் கூறுவது கஷ்டமாக அல்லது வெட்கமாக இருக்கின்றது. தாம் சுயவிமர்சனம் செய்ய வேண்டுமா எனவும் சிலர் அங்கலாய்த்துக் கொள்ளுகின்றார்கள். மறுபுறத்தில் முதலாளித்துவத்தின் அடிவருடிகள் 'சோசலிசம் செத்து விட்டது, மார்க்சியம் மரணப் படுகுழியை நோக்கிச் செல்லுகின்றது' என வாயடித்துக் கொள்ளுகிறார்கள்.

விஞ்ஞான மார்க்சியக் கண்ணோட்டத்துடன் வரலாற்றையும், யதார்த்த நிலமைகளையும் ஆய்வுசெய்யாமையே இக் குழப்பங்களுக்குக் காரணமாக இருக்கின்றது.



## வரலாற்றுப் பின்னணி

1917ல் அக்டோபர் புரட்சி ருசியாவில் முதல் முறையாக ஒரு தொழிலாளவர்க்க அரசை உருவாக்கியது. சகல உற்பத்தித்துறைகளையும் தொழிலாளர்களின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவருதல், ஜேர்மனியுடனான போரை முடிவுக்குக் கொண்டு வருதல், நிலமற்ற விவசாயிகளுக்கு நிலம் வினியோகித்தல், இனப்பிரச்சனைகளுக்குத் தீர்வு காணுதல், நாடு முழுவதும் சோவியத் அதிகாரத்தை ஸ்தாபித்தல் ஆகியவை புரட்சியின் நோக்கங்களாக இருந்தன. வங்கிகளும், பெரும் தொழிற்சாலைகளும், போக்கு வரத்து சாதனங்களும் தேசிய மயமாக்கப்பட்டன. தொழில் வளர்ச்சி முழுமையாக ஏற்படாத ருசியாவில் பொதுவுடமைப் பொருளாதாரத்தை உருவாக்குவதில் பல சிரமங்கள் ஏற்பட்டன. வளர்ச்சியற்ற நாட்டில் முதலாளித்துவக் கடமைகளையும் தொழிலாள வர்க்க அரசுதான் செய்ய வேண்டுமென்பதை உணர்ந்திருந்த பொல்ஷிவிக் கட்சியினர், அதேவேளையில் தமது நாட்டில் ஏற்பட்ட புரட்சியின் உந்துதலால் தொழில் வளர்ச்சி பெற்ற அயல் நாடுகளிலும் புரட்சிகள் ஏற்படலாம் என எதிர்பார்த்தனர்.

புரட்சியைத் தொடர்ந்து ருசிய நில உடமையாளர்களும், சார்மன்னனின் தளபதிகளும், முதலாளிகளும் தம் வெளிநாட்டு வல்லரசு நண்பர்களுடன் உள்நாட்டுக் கலவரங்களையும், வெளியிலிருந்து இராணுவத் தாக்குதல்களையும் ஏற்படுத்தி புதிய அரசைக் கவிழ்க்கும் முயற்சிகளில் ஈடுபட்டனர். இதற்கு அடிப்படையான காரணம் சூழவிருந்த முதலாளித்துவ நாடுகளிலும் ருசியப்புரட்சியின் தாக்கங்கள் ஏற்படலாம் என்பதேயாகும். அவர்கள் எதிர்பார்த்த தாக்கங்கள் 1918ல் ஜேர்மனியிலும், ஆஸ்திரியாவிலும் புரட்சிகளாக வெடித்தன. 1919 ஏப்ரலில், ஜேர்மன் பவேரியாவில்(முன்சன்) தொழிலாளர்கள்

சோவியத்சபைகளை அமைத்தார்கள். ஹங்கேரியில் 1919 மார்ச்சில் சோவியத் குடியரசு பிரகடனப்படுத்தப்பட்டது. 1920 ஏப்ரலில் வடஇத்தாலியத் தொழிலாளர்கள் தொழிற்சாலைகளைக் கைப்பற்றினார்கள். பின்லாந்து, போலந்து, யுகோசலோவியா, பல்கேரியா, செக்கோசலோவக்கியா ஆகிய நாடுகளில் தொழிலாளர்களின் எழுச்சிகள் ஏற்பட்டன. நெதலார்ந்தில் தொழிலாளர்களின் பொது வேலை நிறுத்தத்திற்கு அழைப்பு விடப்பட்டது. இங்கிலாந்தில் தொழிற்சங்கங்களின் கூட்டு அரசாங்கத்தை உலுக்கியது.

ருசியப்புரட்சியின் உந்துதலால் ஏற்பட்ட இந்தப் புரட்சிகர எழுச்சிகளெல்லாம் பல்வேறு காரணங்களினால் தோற்கடிக்கப்பட்டன. உள்நாட்டுக் கலவரங்களினாலும் வெளிநாட்டு வல்லரசுகளின் தாக்குதல்களினாலும் கஷ்டத்திற்குள்ளான இளம் சோவியத்அரசினால் இந்தப் புரட்சிகளுக்கு அதிகம் உதவி செய்ய முடியவில்லை. இநத நாடுகளில் இருந்த சமூக ஜனநாயகக்(சோசலிச) கட்சிகள் முதலாளித்துவக் கட்சிகளுடன் சேர்ந்து கொண்டு இந்த எழுச்சிகளை எதிர்த்தன. இந்த நாடுகளில் உருவாக்கப்பட்ட முன் அனுபவமில்லாத இளம் கம்யூனிஸ்ட்கட்சிகள் ஆட்சியைக் கைப்பற்றுவதில் பல தவறுகளைச் செய்தன. புரட்சிகர எழுச்சிகளைக் கண்ட முதலாளித்துவ அரசாங்கங்கள், தொழிலாளர்களுக்கு பல சலுகைகளைக் (8 மணித்தியால வேலை, வாக்குரிமை..) கொடுத்து புரட்சிகளைத் தடுத்து நிறுத்தின...விளைவு... - ஹங்கேரியில் பெரும் இரத்தக் களரியில் புரட்சி தோற்கடிக்கப்பட்டது..இத்தாலியில் பாசிசம் வெற்றி பெற்றது...பெரும் முதலாளித்துவ அரசுகள் தமது அதிகாரங்களை ஸ்திரப்படுத்திக் கொண்டனர்.



## தனிமைப் படுத்தப்பட்ட புரட்சி

தனித்து விடப்பட்ட சோவியத் குடியரசு 1920-21களில் உள் நாட்டு யுத்தத்தில் வெற்றி கண்டது. ஆனால் யுத்தத்தின் காரணமாக விவாசய உற்பத்திகளிலும் தொழிலுற்பத்திகளிலும் பாரிய வீழ்ச்சிகள் ஏற்பட்டன. நாட்டின் பல பகுதிகளில் வறுமையும் பட்டினிச்சாவும் ஏற்பட்டது.

இந்த நிலமைகளில் லெனின் புதியபொருளாதாரத் திட்டத்தை முன்வைத்தார். நாட்டின் உற்பத்தியில் ஏற்படும் தடைகளை நீக்குவதே அவரின் குறிகோளாக இருந்தது. வங்கிகளும் பெரும்தொழில்களும் தேசிய உடமையாக இருந்த போதிலும், மேலதிக விவசாய உற்பத்திகளை பொதுச்சந்தைகளில் விற்பனை செய்ய உரிமையளிக்கப்பட்டது. சிறு தொழில்களும் தனியார் வியாபாரங்களும் அனுமதிக்கப்பட்டன. பொல்சுவிக்கட்சியினர் இவற்றை ஒரு "தற்காலிக பினவாங்கல்" எனக் கருதினார்கள்.

உணர்வு மிக்க ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் உள்நாட்டுக் கலவரத்தில் ஆயுதமேந்திப் போரிட்டு உயிரிழந்தார்கள். தொழிலுற்பத்திகளில் ஏற்பட்ட வீழ்ச்சிகளினால் தொழிலாளர்களின் எண்ணிக்கை குறைந்தது. அனேகமானோர் கிராமங்களுக்குத் திரும்பினார்கள். கட்சியிலிருந்த தொழிலாளர்கள் பலர் சோவியத் அரசாங்கத்தின் அதிகாரிகளாகப் பதவியேற்றனர். வளர்ச்சியடையாத ருசியா போன்ற நாட்டில் மத்தியதரவர்க்கத்தினரும் புத்திஜீவிகளும் அதிகாரிகளாகப் பதவிகளேற்பது தவிர்க்க முடியாததாயிற்று.

இக்காரணிகளின் விளைவாக குட்டிமுதலாளித்துவப் புத்திஜீவிகளும், சிறு தொழில் சிறு வியாபாரம் ஆகியவற்றில் ஈடுபட்டவர்களும், அதிகாரிகள் பதவிகளுக்கு உயர்த்தப்பட்ட பல்லாயிரக் கணக்கான அதிகாரிகளும் சடத்துவ ரீதியான சலுகைகளைப் பெறக்

கூடிய சூழ்நிலமைகள் ஏற்பட்டன. ருசியத் தொழிலாளர்கள் படிப்படியாக அரசியலிலும் பொருளாதாரத் துறைகளிலும் தமது அதிகாரங்களை இழக்க ஆரம்பித்தனர். ருசியாவில் (கம்யூனிஸ்ட் கட்சி) தனியொருகட்சி மட்டுமே இயங்க அனுமதிக்கப்பட்டது. சோவியத்சபைகளுக்கு சுதந்திரமாகத் தெரிவு செய்யப்பட்ட தொழிலாளர்கள் விவசாயிகள் பிரதிநிகளுக்குப் பதிலாக கட்சி அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். இதனால் சோவியத்துக்கள் செயலிழந்தன. தொழிலாளர்களின் கூட்டுக் கட்டுப்பாட்டில் இயங்க வேண்டிய தொழிற்சாலைகள் கட்சியினால் நியமிக்கப்பட்ட அதிகாரிகளின் கட்டுப்பாடுகளுக்குக் கீழ் கொண்டு வரப்பட்டன. மொத்தத்தில் அரசியல், பொருளாதார, சமூகத்துறைகள் யாவும் எதிர்ப்பேதுமில்லாத கட்சி அதிகாரிகளின் ஆளுமைக்குக் கீழ் கொண்டுவரப்பட்டது.

## லெனினின் எச்சரிக்கை

1920ல் கம்யூனிஸ்ட் (பொல்ஷிவிக்) கட்சியினுள் இருந்த 'தொழிலாளர் எதிரணி' இந்த ஆபத்தைச் சுட்டிக்காட்ட ஆரம்பித்தது. 1921ல் லெனின், கட்சி அதிகாரிகளின் ஆதிக்கம் உருவாகி வருவதை விளங்கிக் கொண்டார். ருசிய அரசை, "அதிகாரிகளினால் சீரழிக்கப்பட்ட தொழிலாளவர்க்க அரசு" என விபரித்தார். தனது அந்திம காலத்தில் சகலருக்கும் இந்த ஆபத்தைப் பற்றி எச்சரித்துக் கொண்டிருந்தார். அவரின் மரணம் அதிகாரத்துவத்திற்கு நன்மையாகவே அமைந்தது. 1923ல் அதிகாரத்துவத்தை விமர்சிப்பதற்கு லியோன் ட்ரொஸ்க்கியின் தலைமையில் இடது எதிரணி உருவாக்கப்பட்டது.

அதிகாரிகளின் ஆட்சி தவிர்க்க முடியாததா?

1920களில் ருசியாவிலிருந்த சமூக பொருளாதார



சூழ்நிலமைகளில் அதிகாரிகளின் ஆட்சி தவிர்க்க முடியாதவொன்று என எண்ணுவது தவறாகும். கம்யூனிஸ்ட்(பொல்ஷிவிக்) கட்சிக்குள் இருந்த இடதுஎதிரணியினர், அதிகாரிகளின் ஆட்சியைத் தடுக்கும் சூழ்நிலமைகளை உருவாக்கி, புரட்சியைச் சீரழியாமல் காப்பாற்றுவதற்கான செயற் திட்டத்தை முன் வைத்தனர். அவை;

1.தொழில் வளர்ச்சியை ஊக்கப்படுத்தி, தொழிலாளர்களின் எண்ணிக்கையையும் அவர்களின் வர்க்கசக்தியையும் அதிகரித்தல்.

2.தொழிலாளர்களின் கூலிகளை அதிகரித்தலும், வேலையில்லாமையை இல்லாதொழிப்பதும் - இதனால் தொழிலாளர்களுக்கு சுயநம்பிக்கையை ஊட்டுதல்.

3.சோவியத்(தொழிலாளர்)சபைகளுக்குள்ளும் கம்யூனிஸ்ட் கட்சிக்குள்ளும் ஜனநாயக சுதந்திரங்களை நிலை நிறுத்துவதன் மூலம் தொழிலாளர்களின் வர்க்க உணர்வுகளையும் அரசியல் நடவடிக்கைகளையும் ஊக்குவித்தல்.

4.ஏழைவிவசாயிகளுக்கு கடன் வசதிகள், இயந்திரங்கள் ஆகியவற்றை கொடுத்து உதவுதல். செல்வந்த விவசாயிகளிடம் வரிகளை அறவிடுதல்.

5."கொமிடோன்"(கம்யூனிச அகிலம்) உலகப்புரட்சி சம்பந்தமாகச் செய்யும் தவறுகளைத் திருத்திக் கொள்ளுதல்.

அன்று ருசிய கம்யூனிஸ்ட் கட்சி, எதிரணியின் இந்த செயற்திட்டத்தை ஏற்றிருந்தால், புரட்சி மேலும் சீரழிவதையும் அதிகாரிகளின் ஆட்சி ஸ்திரமடைவதையும் தடுத்திருக்கலாம். ஆனால் கட்சியின் பெரும்பான்மையான அங்கத்தவர்கள் அதிகாரிகளாக மாறிக் கொண்டிருந்தார்கள். மறுபகுதியினர் இதைக் காலம் தாழ்த்தியே (மரணதண்டனைகளை எதிர்நோக்கும் பொழுதுதான்) உணர்ந்து கொண்டார்கள்!

புரட்சிக்கட்சியின் அங்கத்தவர்களின் அசமந்தமான போக்கும்

(அகநிலைக்காரணி), ருசியநாட்டின் சமூக பொருளாதார நிலமைகளும் (புறநிலைக்காரணி) சோவியத்புரட்சி சீரழிவதற்கும் கட்சி அதிகாரிகளின் ஆட்சி ஏற்படுவதற்கும் காரணமாக அமைந்தன.

## அதிகாரத்துவம் என்றால் என்ன?

ஆட்சி செய்யும் கட்சி அதிகாரிகள்- அதிகாரத்துவம் - ஒரு ஆளும் வர்க்கம் அல்ல. உற்பத்தி உறவுகளில் தவிர்க்க முடியாத ஒரு அங்கமாக அவர்கள் பங்கு கொள்ளவில்லை. அவர்களை பொதுவுடமைச் சமுதாயத்திலுள்ள "ஒட்டுண்ணிகள்" என்றுதான் வர்ணிக்கலாம்.

சோவியத் அரசியலையும் பொருளாதாரத்தையும் நிர்வகிக்கும் பொறுப்புக்களை, சூழ்நிலமைகள் காரணமாக சுவீகரித்துக் கொண்டு, அதன் பயனாக அதிக சம்பளங்களையும், சலுகைகளையும் பெறும் ஒரு கூட்டத்தினர்தான் இந்த அதிகாரிகள்! இவர்கள் உற்பத்திச் சாதனங்களுக்குச் சொந்தமானவர்கள் அல்ல. உற்பத்திச் சாதனங்கள் பொதுவுடமையாக்கப்பட்ட புரட்சியின் பின் அதனை நிர்வகிக்க உள்வாங்கப்பட்ட மத்தியதரவர்க்க புத்திஜீவிகளும், கட்சி அங்கத்தவர்களும், தொழிலாளர்களும் தான் இவர்கள். அக்டோபர் புரட்சியின் வெற்றிகளினால் ஏற்பட்ட தேசிமயமாக்கப்பட்ட உற்பத்தி, திட்டமிடப்பட்ட பொருளாதாரம், அரசிற்கு வெளிநாட்டு வியாபாரத்திலுள்ள ஏகபோகம் - இவை எல்லாவற்றிலும் இவர்களின் அதிகாரங்களும் சலுகைகளும் தங்கியிருக்கின்றது. அதனால் இந்தப்புரட்சியின் வெற்றிகளைக் காப்பாற்றுவதன் மூலமே இவர்கள் தங்களுடைய அதிகாரங்களையும் சலுகைகளையும் காப்பாற்ற முடியும். இந்த அதிகாரிகளின் நலன்களைப் பாதுகாப்பதற்காகவே "தனி ஒரு நாட்டில் சோசலிசத்தை ஸ்தாபிக்கும்",- முற்றிலும் மார்க்சியத்திற்கு விரோதமான, குட்டிமுதலாளித்துவ-கொள்கையை ஸ்டாலின் பிரகடனப்படுத்தினார். இந்தத் தனி ஒரு நாட்டின் அரசைக்



காப்பாற்றுவதுதான்,- அதன் வெளிநாட்டுக் கொள்கைகளை ஆதரிப்பதுதான் - சர்வதேச கம்யூனிஸ்ட் கட்சிகளின் கொள்கைகளாக இருக்க வேண்டுமென வரையறுத்தனர். முதலாளித்துவத்துடனான சமாதான சகஜீவனம் என்ற அடிப்படையில் மற்றைய நாடுகளிலுள்ள புரட்சிகளை ஊக்குவிக்கப் பின்நின்றார்கள். அந்த எழுச்சிகள் ருசியத் தொழிலாளர்களின் அரசியல் நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் என அவர்கள் அஞ்சினார்கள். ஆனால் தம் சலுகைகள் அழிந்துவிடும் என்பதால், ருசியாவில் முதலாளித்துவம் மீள உருவாகுவதையும் அவர்கள் விரும்பவில்லை.

## அதிகாரத்துவத்தின் சர்வதிகாரம்

இந்த அதிகாரிகளின் ஆட்சியை ஸ்திரமாக்குவதற்கு தனிநபர் வழிபாடு, வரலாற்று உண்மைகளை இருட்டடித்தல், இரகசியப்பொலிஸ் பயங்கரவாதம் ஆகியவை கம்யூனிசத்தின் பெயரால் நடாத்தப்பட்டன. பொல்ஷிவிக் கட்சியின் மூத்ததலைவர்களும் ஆயிரக்கணக்கான அங்கத்தவர்களும் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டனர். நாடுகடத்தப்பட்டனர். படுகொலை செய்யப்பட்டனர். சித்திரவதைகள் மூலம் ஒப்புதல் வாக்கு மூலங்கள் பெறப்பட்டன. சோடிக்கப்பட்ட "மொஸ்கோ" வழக்குகளில் பலருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது. பத்து லட்சம் பேர் படுகொலை செய்யப்பட்டார்கள்.(நேற்று வரை, இவற்றையெல்லாம் சர்வதேச ஸ்டலினிஸ்ட் மற்றும் மாவோவாத கம்யூனிஸ்ட் கட்சிகள் நியாயப்படுத்தின. உண்மைகளை மூடிமறைத்துப் பிரசாரம் செய்தன.)

1940 வரை ருசியாவின் பின்தங்கிய பொருளாதாரமும் சர்வதேச புரட்சிகளின் பின்னடைவுகளும் தொடர்ந்தன.

## திட்டமிட்ட பொருளாரத்தின் வளர்ச்சி

அதிகாரத்துவத்தின் அத்தனை தவறுகளுடனும், தொடர்ந்த ஐந்தாண்டுத் திட்டங்களினால் திட்டமிட்ட பொருளாதாரத்தின் கீழ் தொழில் வளர்ச்சி அதிகரித்தது. படிப்படியாக உலகின் இரண்டாவது தொழில் வளர்ச்சி பெற்ற நாடாக ருசியா உருவாகியது. தொழில் நுட்பத்திலும் கலாச்சாரத்திலும் எண்ணிக்கையிலும் வளர்ச்சி பெற்ற புதிய தொழிலாள வர்க்கம் உருவாகியது.

யுகோசலோவியா, சீனா, வியட்நாம், கியுபா ஆகிய நாடுகளில் புரட்சிகள் வெற்றி பெற்றன. இரண்டாவது உலக யுத்தத்தின் முடிவில் பாசிச ஜேர்மனியப் படைகளை ருசியா தோற்கடித்த பின்பு கிழக்கு ஐரோப்பிய நாடுகளில், ருசியாவுக்கு அனுசரணையான கம்யூனிச (அதிகாரிகளின்) அரசுகள் ஸ்தாபிக்கப்பட்டன.

## புதிய சூழ்நிலைகள்

இந்த மாற்றங்கள் 1920களிலிருந்த சூழ்நிலமைகளிலிருந்து முற்றிலும் மாறுபட்ட புறக்காரணிகளை உருவாக்கின. ருசியாவைச் சூழ இருந்த முதலாளித்துவ வல்லாசுகளுக்குப் பதிலாக அதற்கு





ஆதரவான கம்யூனிச நாடுகள் இருந்தன. இராணுவரீதியாக ருசிய பலம் பொருந்திய நாடாக உருவாகியது. கல்வி கலாச்சாரத்தில் வளர்ச்சியடைந்த ருசிய தொழிலாள வர்க்கத்திடமிருந்தும் புத்திஜீகளிடமிருந்தும் அதிகாரிகளின் ஆட்சிக்கு எதிராக எதிர்ப்பு நடவடிக்கைகள் துளிர் விடத் தொடங்கின. அதிகாரிகள் எதிர்புரட்சியாளர்கள் என இவற்றை ஒடுக்க முற்பட்டார்கள். 1953ல் கிழக்கு ஜேர்மனியில், 1956ல் ஹங்கேரியிலும் போலந்திலும், 1968ல் செக்கோசலோவக்கியாவில்( 1989ல் சீனாவில்! ) இந்த எழுச்சிகள் இராணுவத்தினரால் மூர்க்கத்தனமாக அடக்கப்பட்டன. இந்த மாற்றங்கள் கம்யூனிஸ்கட்சிகளுக்குள்ளும் அதிகாரத்துவத்திற்குள்ளும் பிளவுகளை ஏறபடுத்தின.

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 20வது மகாநாட்டில் கட்சியின் செயலாளர் குருச்சோவ், அதிகாரத்துவத்தின் தவறுகளுக்கெல்லாம் தனி மனிதனான ஸ்டாலினே காரணமென முற்றிலும் மார்க்சியத்திற்கு விரோதமான முறையில் குற்றம் சாட்டினார். ஆனால் இந்த அரசியல் விழிப்புணர்ச்சியின் வளர்ச்சியை எவராலும் தடுத்து நிறுத்த முடியவில்லை. தொழிலாளர் ஜனநாயகத்திற்கான இரகசிய நடவடிக்கைகள் வளர ஆரம்பித்தன.

## கிளாஸ்நொஸ்ட் - பிரஸ்ரொறிக்கா

இவற்றின் தொடர்ச்சியே இன்று சோவியத் ருசியாவிலும் மற்றைய கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் ஏற்படும் மாற்றங்களாகும். சோவியத் ருசியாவில் நடைமுறைக்கு வந்திருக்கும் 'கிளாஸ்நொஸ்ட்'( பகிரங்க ஜனநாயக கலந்துரையாடல்களும் நடவடிக்கைகளும், அதன் பலனாக ஏற்பட்டு வரும் மற்றங்களும்) 'பிரஸ்ரொறிக்கா'( பொருளாதார மற்றும் உறவுகளிலான மறுசீரமைப்புக்கள்) ஆகியவற்றை இந்தக் கண்ணோட்டத்துடனேயே நாம் அணுகவேண்டும்.

'கிளாஸ்நோஸ்ட்' மூலமாக ஏற்பட்டுவரும் மாற்றங்கள் கம்யூனிஸ்ட் கட்சியினுள்ளிருந்து அதன் உயர் மட்டங்களினாலேயே ஆரம்பித்தன. அதன் விளைவாக அடிமட்டங்களில் உள்ள - தொழிலாளர்கள், வெகுஜனங்கள்- மத்தியிலேற்படும் சுதந்திரமான எழுச்சிகளை மிரட்டாமலும், அடக்கு முறைகளைப் பாவிக்காமலும் பொறுமையுடன் அதிகாரத்துவம் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

இதே முறையில் பொருளாதாரத்தையும் மற்றைய நாடுகளுடனான உறவுகளையும் மறுசீரமைக்க 'பிரஸ்ரொறிக்கா' மூலம் அதிகாரத்துவம் முயலுகின்றது.

கம்யூனிஸ்ட் கட்சிகளுக்குள்ளும், அரசகளுக்குள்ளும் 'கிளாஸ்நோஸ்ட்'பாரிய வெடிப்புக்களையும் விவாதங்களையும் உருவாக்கியுள்ளது. கடந்த காலத் தவறுகள் எவ்வாறு நடந்தன? அவற்றிற்கான காரணமென்ன? என்பவை பற்றிப் பகிரங்க விவாதங்கள் உருவாகியுள்ளன. அதிகாரத்துவத்தின் தன்மையினை, அதிகாரத்தை, சலுகைகளை, அதன் வரலாற்றை மக்கள் விவாதிக்கின்றார்கள். 'கிளாஸ்நோஸ்ட்' அதிகரத்துவத்திற்குச் ஒரு சவாலாகவே இருக்கின்றது. 'கிளாஸ்நோஸ்ட்'ஐ எவ்வளவு தூரத்திற்கு அனுமதிப்பது என்பதில் அதிகாரிகளுக்குள் அபிப்பிராய பேதங்கள் இருக்கின்றன. ஸ்டலினிசப் பழமைவாதிகள் 'கிளாஸ்நோஸ்ட்'ஐ முற்றாக எதிர்க்கிறார்கள், ஆனால் 'பிரஸ்ரொறிக்கா'வை - ஏகாதிபத்தியத்துடனான உறவுகள், ஒப்பந்தங்கள் உட்பட - அவர்கள் ஆதரிக்கின்றார்கள். இதுவரைகாலமும் இழைக்கப்பட்ட அநீதிகள், படுகொலைகள், சமத்துவமின்மை, வறுமை, ஒடுக்குமுறை ஆகியவைகள் அம்பலத்திற்கு வருவதையும் அவற்றிற்கு எதிராக மக்கள் அணிதிரளுவதையும், பழமைவாதிகள் விரும்பவில்லை. இதில் வேடிக்கை என்னவென்றால் தீவிர மார்க்சியத்தின் அடிப்படையிலேயே தாம்



(பிடல் கஸ்ட்ரோ உட்பட) இவற்றை எதிர்ப்பதாக அவர்கள் கூறுகின்றார்கள்!

## சோசலிச ஜனநாயகம்

தீவிர மார்க்சியத்தின் பெயரால் 'கிளாஸ்நோஸ்ட்'இல் எதிர்ப்பதற்கு ஒன்றுமில்லை. சுதந்திரமாக மக்கள் கருத்துச் சொல்லும் உரிமை, ஊர்வலம் போகும் உரிமை, கூட்டம் கூடும் உரிமை, வேலைநிறுத்தம் செய்யும் உரிமை, பல்வேறு கலாச்சாரங்களுக்கும் இனங்களுக்கும் சுயநிர்ணய உரிமை - இவற்றை முதலாளித்துவ ஜனநாயகமென மறுப்பது மார்க்சியத்திற்கே விரோதமாகும். தொழிற்சங்கங்களும் வேலைநிறுத்த உரிமைகளும் முதலாளித்துவ நலன்களைப் பாதுகாப்பதற்கு ஏற்படுத்தப் பட்டவையல்ல!

பல கட்சிகள் இருக்கும் நடைமுறை மார்க்ஸ், ஏங்கல்ஸ், லெனின் சிந்தனைகளுக்கு விரோதமானவையல்ல. 1878ல் முதன் முதலாக அமைக்கப்பட்ட தொழிலாளர் அரசான "பாரீஸ் கம்யூனில்" பல கட்சிகள் இருந்தன. புரட்சியின் பின் 1917ல் இருந்து 1921 வரை, ருசியாவில் பல கட்சிகள் இருந்தன. இன்றைய நிக்கரகுவா இன்னுமொரு உதாரணம்.

முதலாளிகள் தமது மூலதனத்தைக் கொண்டு பத்திரிகைகளையும் அச்சுக்கூடங்களையும் கட்டுப்படுத்தும் பொழுது பத்திரிகைகள் முதலாளித்துவ நலன்களைப் பாதுகாக்கின்றன. மூலதனம் அற்றுப் போன - உற்பத்திசாதனங்கள் பொதுவுடமையாக்கப்பட்ட - ஒரு நாட்டில், பத்திரிகைச் சுதந்திரம் சகல உழைக்கும் மக்களின் சுதந்திரமாக மாறுகின்றது. ஆனால தொழிலாளர் சுதந்திரமென்பது சில கட்சித்தலைவர்களுக்கும் தொழிற்சங்க அதிகாரிகளுக்குமான சுதந்திரமென்று அர்த்தமல்ல!

அதை மக்கள் அனுமதிக்க மாட்டார்கள்.

## முதலாளித்துவத்தின் ஆரவாரம்!

கமுயுனிச சமுகங்களை மறுசீரமைக்கும் வேலைத்திட்டங்கள் அவற்றுனுள் இருந்தே தோன்றின, அவை முதலாளிததுவத்தின் நல்லுபதேசங்களால் ஏற்படவில்லை! ஆனால் அவற்றில் காணப்படும் குறைபாடுகளை முதலாளித்துவம் தனக்குச் சாதகமாக்கப் பயன்படுத்தப் பார்க்கின்றது. உலக கம்யூனிஸ்ட் கட்சிகள் மத்தியில் வளர்ந்து வந்த மிதவாதப் போக்குகளை ஆதரிப்பதாலும், ஏகாதிபத்தியத்தின் சமாதானப் போக்குகள் பற்றிய கற்பனைகளை உருவாக்குவதாலும், எமது காலத்தின் முக்கிய முரண்பாடுகளை வர்க்கக் கூட்டால் தீர்க்கலாம் என்ற நம்பிக்கைகளை ஏற்படுத்துவதாலும், சந்தைப் பொருளாதாரத்தின் புகழ்களை விமர்சனமின்றிப் பாடுவதாலும், கொபர்ச்சோவின் புதிய சிந்தனைகளை சர்வதேச சமுக ஜனநாயக வாதிகளும், முதலாளித்துவப் பொருளாதாரவாதிகளும், தமது நலன்களுக்காக, ஆதரிக்கின்றார்கள். அவர்களுடைய அடிப்படை நோக்கம் இந்த மாற்றங்கள் பற்றிக் குழப்பங்களை ஏற்படுத்துவதும், சர்வதேச தொழிலாள வர்க்கத்தின் போராட்டங்களை பின்னடையச் செய்வதுமேயாகும்.

பெரும்பான்மையான உழைக்கும் மக்களைக் கொண்ட இந்த கம்யூனிச நாடுகளில் முதலாளித்துவம் மீளக் கட்டியெழுப்பப்படப் போகின்றதா, அல்லது அதிகாரத்துவ அரசாங்கங்களுக்குப்பதிலாக அரசியல் புரட்சி மூலம் தொழிலாளர் ஜனநாயகம் உருவாக்கப்படப் போகின்றதா அல்லது அதிகாரத்துவங்களின் தந்திரோபாயங்களாலும் ஒடுக்கு முறைகளினாலும் 'கிளாஸ்நொஸ்டி'னால் பெற்ற ஜனநாயக உரிமைகள் இல்லாமல் போகப் போகின்றனவா என்பதை அங்குள்ள யதார்த்த நிலமைகளையும் மார்க்சீய சித்தாந்தத்தையும் கொண்டுதான்



நாம் ஆய்வு செய்ய வேண்டுமே ஒழிய முதலாளித்துவ ஊதுகுழல பிரசாரங்களை அடிப்படையாகக் கொண்டு ஆய்வு செய்யக் கூடாது.

## மக்களும் மாற்றங்களும்

இன்றைய ருசிய சமுகத்தை வருமாறு விபரிக்கலாம்;


அதிகாரித்துவத்தின் உயர் மட்டங்களில் அதிக சலுகைகளைப் பெறும் அதிகாரிகளும், அவர்களுக்குத் தளமாக பரந்தளவில் அரசயந்திரங்களையும் பொருளாதாரத்தையும் நிர்வகிக்கும் அதிகாரிகளும். கிளஸ்நொஸ்டுக்கு ஆதரவளிப்பவர்களும் எதிர்ப்பவர்களும் இந்த மட்டத்தில் இருக்கின்றார்கள். ஆனால் பெரும்பான்மையினர் எதிராகவே இருக்கின்றனர்.

நகரங்களிலும் கிராமங்களிலும் வாழும் மத்தியதரவர்க்கத்தினரும், குட்டி முதலாளிகளும், புத்திஜீவிகளும். இவர்கள், ருசியா, கிழக்கு ஜேர்மனி, செக்கசோலோவோக்கியா போன்ற நாடுகளில் பெரும் தாக்கங்களை ஏற்படுத்தக் கூடியவர்களாக இருக்கின்றார்கள்.

பரந்த அளவில் பெரும்பான்மையாக வாழும் உழைக்கும் மக்கள் - தொழிலாளர்கள், விவசாயிகள். உரிமைகளுக்காக ஊர்வலங்களிலும் ஆர்ப்பாட்டங்களிலும் வேலைநிறுத்தங்களிலும் பங்கு கொள்பவர்கள் இவர்கள்தான்.

இந்த சமுகத்தட்டுக்களில் வாழும் மக்கள் தங்களின் நலன்களுக்கமையவே இன்றைய மாற்றங்களில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளுவார்கள், ஆதரிப்பார்கள்.

எல்லா கம்யூனிஸ்ட் நாடுகளிலும் நடுத்தர - குட்டிமுதலாளித்துவ வர்க்கத்தினர் சிறு தொகையினராகவே இருக்கின்றனர். இவர்களுக்கு சர்வதேச முதலாளித்துவ சக்திகளின் ஆதரவுகள் இருந்த போதிலும் முதாலாளித்துவத்தை மீளக்



கட்டியெழுப்பும் சக்திவாய்ந்த வர்க்கமாகவும் இவர்கள் இல்லை. இதைச் செய்வதற்குக்கூட இவர்கள் சீர்திருத்தங்களை முன்னெடுக்கும் ( கொபர்ச்சேவ் சார்பு ) அதிகாரிகளிடமே தங்கியிருக்க வேண்டியிருக்கின்றது. ஆனால் சீர்திருத்தங்களை முன்னெடுக்கும் அதிகாரிகளுக்கு இவ்வாறான "தற்கொலை" நோக்கங்கள் கிடையாது. இந்த அதிகாரிகள் பற்றிய தவறான கணிப்பீடே இவ்வாறான எண்ணங்களுக்கு இட்டுச் செல்லுகின்றது. முதலாளித்துவம் மீளக்கட்டியெழுப்பப்பட்டால் மிகச்சிறிய தொகையான அதிகாரிகளுக்கே பெரும் தொழிலதிபர்களாக வரும் வாய்ப்பு ஏற்படலாம். ஆனால் ருசியாவில் மட்டும் இன்று 300,000 உயர்மட்ட அதிகாரிகள் இருக்கின்றார்கள்! இவர்களுக்கடுத்த தட்டில் இருப்பவர்கள் தொகை இன்னும் அதிகம்!! தம் சலுகைகளையும் அதிகாரங்களையும் விட்டுக் கொடுக்க இவர்கள் விரும்ப மாட்டார்கள். "நுகர்ச்சிப் பொருட்களுக்கான சந்தை" பற்றிப் பேசப்படுவதால், முதலாளித்துவம் மீளவரப் போவதாகச் சிலர் மருளுகிறார்கள். முதலாளித்துவம் தோன்றுவதற்குப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சந்தை தோன்றிவிட்டதை இவர்கள் மறந்துவிடுகிறார்கள். முதலாளித்துவத்திதில்



உற்பத்திப்பொருள் மட்டும் சந்தைக்கு வருவதில்லை, உற்பத்தி சாதனங்களும், உழைப்பு சக்தியும் சந்தைக்கு வருகிறது. பொல்ஷிவிக் புரட்சி இந்த முதலாளித்துவ சந்தையை அழித்து விட்டது. அதைக் கற்பனையில் கட்டியெழுப்ப முடியாது.

இந்த அதிகாரிகளின் ஆட்சியில் ருசியசமூகம் முதலாளித்துவத்திலிருந்து சோசலிசத்திற்கு மாறிக் கொண்டிருக்கும் சமூகமாகவே இருக்கின்றது- அது முழுமையான சோசலிச சமுதாயமல்ல. ஒரு பலாத்காரமான எதிர்புரட்சி மூலமே அங்கு முதலாளித்துவத்தை மீள ஸ்தாபிக்க முடியும் - ஆனால் தொழிலாளரின் ஜனநாயகத்திற்கான அரசியல் புரட்சி மூலம் தொழிலாள வர்க்கத்தினுடைய ஆழுமையைப் பெற முடியும். இதுவே அதிகாரிகளின் ஆட்சிக்கு ஒரு முடிவையையும் கொண்டுவரும்.

ஆளும் அதிகாரத்துவம், முதலாளித்துவத்திற்கு சார்பாக மாறுமா அல்லது தொழிலாளர்களுடன் இணைந்து கொள்ளுமா என்பதை புரிந்து கொள்வதற்கு, கடந்த காலங்களில் கட்சி அதிகாரத்துவங்கள் தமது ஆளுமைக்குப் பங்கம் வந்தபோது எவ்வாறு நடந்து கொண்டன என்பதை அறிவது அவசியமாகும்.

ருசியாவில், 1927 - 33 களிலும், 1941 - 43 களிலும் ஏற்பட்ட குழப்பநிலைகளில், கட்சி அதிகாரிகள் முதலாளித்துவ அல்லது தொழிலாள ஜனநாயக தீர்வுகளுக்குப் போகாமல் தமது அதிகாரத்தில் ஒட்டிக் கொண்டிருக்கும் நடவடிக்கைகளிலேயே ஈடுபட்டனர். சமீபத்திய உதாரணமாக சீனாவை எடுத்துக் கொள்வோம்; சீனாவில் டெங்கின் பொருளாதாரக் கொள்கைகள் திட்டமிட்ட பொருளாதாரத்தைச் சீர்குலைத்து, பணவீக்கத்தை ஏற்படுத்திய பொழுது, சீன அதிகாரத்துவம் அவற்றிற்குத் தீர்வாக தனியுடமை முதலாளித்துவப் தீர்வுகளுக்குப் போகவில்லை! மாறாக பொருளாதாரத்தின் மீது இறுக்கமான அதிகாரிகளின் கட்டுப்பாடுகளைக் கொண்டுவரும்

நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்!! அதே சமயம் தமது ஆளுமைக்குச் சவாலாக அமைந்த மாணவ - தொழிலாள சக்திகள் மீது ராணுவ நடவடிக்கைகள் எடுக்கவும் தயங்கவில்லை!!!

## அரசியல் புரட்சி

இதன் அர்த்தம் இந்த அதிகாரிகளின் ஆட்சியை ஒரு வர்க்கத்தின் அரசியல் போராட்டத்தின் மூலமே அகற்ற முடியுமென்பதாகும். இன்று ருசியாவியாவிலுள்ள நிலமைகளில் அங்கு புதிதாக தோற்றுவிக்கப்படும் முதலாளித்துவத்திலும் பார்க்க அங்கு உள்ள தொழிலாள வர்க்கமே இதைச் செய்யககூடிய சக்தி வாய்ந்ததாக இருக்கின்றது.

இன்றைய முதலாளித்துவ ஊதுகுழல்கள் எப்படிப் புழுகினாலும் போலந்திலும் சரி, ஹங்கேரியிலும் சரி, அதிகாரத்துவத்தின் கைகளிலேயே( முதலாளித்துவத்திற்கு ஆதரவானவர்களின் கைகளிலல்ல) அரசவியந்திரங்கள் இருக்கின்றன. இந்த ஊதுகுழல்கள், 3,500 லட்சம் தொழிலாளர்களை அரசியல் அரங்கில் எதையும் செய்ய முடியாத கையாலாகாதவர்கள் என்ற, குருட்டுக் கணிப்பீட்டுடனேயே புழுகுகின்றன. இந்த நாடுகளில் கடுமையான சமூகப் போராட்டங்களின் மூலமாகவே எந்த வித மாற்றமும் ஏற்பட முடியும் - அதில் அங்குள்ள தொழிலாளர்கள் முக்கிய பங்கு வகிப்பார்கள். இந்தப் போராட்டங்களில் இவர்கள் தோற்கடிக்கப் பட்டாலன்றி அங்கு முதலாளித்துவம் மீள எழுவதற்கு எவ்வித சாத்தியமுமில்லை!

முதலாளித்துவமற்ற சமுதாயத்தில் - கம்யூனிஸ்ட் நாடுகளில் - பிறந்து வளர்ந்த புதிய தலைமுறை தொழிலாளர்கள் தாம் வாழும் சமுதாயத்திலும் பார்க்க சிறந்த ஒரு சமுதாயத்தைப் படைக்கவே போர்க் கொடி தூக்கியுள்ளார்கள். தங்கள் வளர்ச்சி "பெற்ற நாடுகளிலேயே" , வேலையில்லாமை, வறுமை, போதை, குழப்பம்,



இனவெறி, போர்....இதையெல்லாம் இன்னும் வளரவிட்டுக் கொண்டிருக்கும் "முதலாளித்துவத்தை" மீளக் கொண்டுவர அவர்கள் போர்க் கொடி எடுக்கவில்லை. "கிளஸ்நோஸ்ட்" அவர்களின் அடிப்படை உரிமைகளை வென்றெடுக்க உதவுகின்றது. சுதந்தர அமைப்புகளை ஏற்படுத்த உதவுகின்றது. அரசியல் விவாதங்கள், ஊர்வலங்கள், சுயநிர்ணய உரிமைப் போராட்டங்கள்.... - அவற்றின் அனுபவங்கள் - இவையெல்லாம் வளரும் அரசியல் புரட்சிக்கான அடிக்கற்கள்.


தொழிலாள வர்க்கத்தின் இந்த அரசியல் புரட்சிகளே சோசலிசத்தை முழுமையாக்கப் போகின்றன. இதனால்தான் சோசலிசத்தின் வருங்கால வளர்ச்சிக்கு "கிளாஸ்நொஸ்ட்" அத்தியாவசியமாகிவிட்டது. "பிரஸ்ரொறிக்கா"வினால் தங்கள் நலன்கள் பாதிக்கப்படுவதையும் அவர்கள் அனுமதிக்க மாட்டார்கள். தங்கள் நுகர்ச்சிப் பொருட்களுக்கு "சந்தைப் பொருளாதாரத்தை" பாவித்தாலும் தம் உழைப்பைச் சந்தைப்படுத்த விடமாட்டார்கள்! புரட்சிகர மார்க்சியமும் போராடும் தொழிலாள வர்க்கமும் இருக்கும் வரை சோசலிசம் செத்துவிடப் போவதில்லை.

- கு.பரராஜசிங்கம்

சுதந்திரமான கருத்துப் பரிமாறல்கள் மூலமே சிந்தனை உருவாகின்றது.

ஆக்கங்கள்' விமர்சனங்கள்' கடிதங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:

**SINTHANAI**
**ALBUCHWEG 8**
**7000STUTTGART 1**
**WEST GERMANY**




இன்னும்
சூரியன் மட்டும்
நோய்வாய்ப் படவில்லை...

இங்கு
காற்று
நீர்
மரங்களுக்கெல்லாம்
காய்ச்சல் வந்துவிட்டது...

ஓசோனின்
ஆடைகுறைப்பு
பல தொழிற்சாலைகளால்
இன்னும் ரசிக்கப்படுகின்றது...

யுரேனியம்
உடைத்து
அணுசக்தி செய்பவர்களே
எச்சரிக்கை
இதோ பூமியின் கரு
உடைந்து கொண்டிருக்கின்றது...

காடுகளை அழித்து
நகரங்கள்
நடுபவர்களே
கரு முகில்கள் இனி
மகாநாடு
நடாத்தா
அவைகள் அழுவதை
நிறுத்துவதாய்
அவசர கடிதம் போட்டுள்ளன...
நீங்கள்
தொழில் நுட்பமென்று
தோண்டிய சுரங்கங்களும்
புதைத்த
அணுக்கழிவுகளும்
பூகம்பம் கொண்டுவருமாம்

விஞ்ஞானிகளே
இனியாவது
ஆராய்ச்சி முடிவில் எழுதுங்கள்
விஞ்ஞானத்துக்காக
வாழ்க்கையல்ல
வாழ்க்கைக்காக
விஞ்ஞானம் என்பதை

இனியும்
பூமியை
நிர்வாணமாக்காதீர்கள்!

— காங்கேசன் கோவிந்குமார்



# இந்திய பொதுத்தேர்தல்

எல்.எல்.ராசன்.

நடந்து முடிந்த இந்திய பாராளுமன்றத் தேர்தலானது ஒரு தெளிவில்லாத முடிவில்லாத முடிவைக் கொடுத்துள்ளது. வட மாநிலங்கள் ஓர் விதமாகவும் தென் மாநிலங்கள்வேறோர் விதமாகவும் வாக்களித்துள்ளன. இப்படியான வாக்களிப்பு பலமுறை நடைபெற்றிருந்தாலும் இம்முறை இந்தியவரலாற்றில் ஆழமாக வேர்விட்டு இருந்த காங்கிரசை எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து, தங்களுக்குள் போட்டியின்றி, காங்கிரசுக்கு எதிராக ஒரு வேட்பாளரை நிறுத்திப் பாராளுமன்ற வரலாற்றில் இரண்டாவது முறையாக காங்கிரசைத் தோற்கடித்துள்ளனர்.

இத்தேசிய முன்னணியை உருவாக்க ஜான்மோச்சா, ஜனதா, லோகதளம், காங்கிரஸ்(S), தி.மு.க, அஸ்ஸாம் மக்கள் கட்சி, தெலுங்குதேசம் ஆகியன ஐக்கியப்பட்டன. ஆக தேசிய முன்னணி அரசின் பலவீனமானது மாநிலக்கட்சிகளில் தங்கியிருக்க வேண்டியுள்ளதேயாகும். இந்த மாதிரியான பல்வேறுவகைப்பட்ட அமைப்புகளின் தயவில் ஆட்சி நடத்த வேண்டியிருப்பதால் ஓர் உறுதியான, திடமான நடவடிக்கை எடுக்கமுடியாது. எல்லா அமைப்புக்களையும் திருப்திப்படுத்தக்கூடிய நடவடிக்கைகளை மட்டுமே செய்யக்கூடியதாகவுள்ளது. இருந்த போதிலும் தி.மு.க, தெலுங்குதேசம் போன்ற மாநில வெறி கொண்ட கட்சிகள் தங்கள் தங்கள் மாநிலங்களில் தோற்கடிக்கப்பட்டதால் அவைகளைத் திருப்திப்படுத்த

வேண்டிய தேவை தேசிய முன்னணிக்கு இல்லை. இது அதன் பலமே. எப்படிப் பார்த்தாலும் தேசியமுன்னணி அரசானது இந்தியவரலாற்றின் ஒரு சிறுபான்மை அரசே. அதற்கு பாரதிய ஜனதாவும், இடது கம்யூனிஸ்டுகளினதும் ஆதாவு கருவதால மட்டுமே ஆட்சி அமைக்கக்கூடியதாய் இருக்கின்றது. இவற்றின் ஒன்றின் ஆதரவு இல்லாவிடின் ஆட்சியமைக்கக்கூடிய பெரும்பான்மை இவ்வரசுக்கு இல்லை. இவ்விரண்டு கட்சிகளுக்கும் அரசினால், அமைச்சர், துணைஅமைச்சர் பதவிகள் தரப்பட்டபோதிலும் அவற்றை ஏற்காமல் அரசுக்கு வெளியில் இருந்து ஆதாவு தருவதாகக்கூறிவிட்டன. இது ஒருவேளை அரசின் மேல் மக்களுக்கு வெறுப்பு வரும் போது தாஙகள் அரசிற்குள் இருக்கவில்லை என்று காரணம் காட்டித் தப்புவதறகு வழிகோலுமோ என்னவோ? இவ்விரண்டுகட்சிகளும் ஒன்றுக்கொன்று எதிரான கொள்கைகளை உடையவை. பாரதிய ஜனதா ஒரு இந்து வெறிக்கட்சியாகும். அதற்கு எதிரான கொள்கையை கம்யூனிஸ்டுக்கள் கொண்டுள்ளார்கள். புகழ்பெற்ற ஸ்ரீராம ஜென்மபூமி விவகாரத்தால் இந்துக்களின் வாக்குகளை பெற்று வென்ற பாரதிய ஜனதாவானது மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதியின்படி ராமர் கோயிலைக்கட்டும் பொழுது இந்த அரசோ, முஸ்லிம் மக்களின் எதிர்ப்பைச் சந்திக்க வேண்டியிருக்கும். அதே நேரத்தில் கம்யூனிஸ்டுக்கள் இவ்விவகாரத்தில் தெளிவான முடிவை ஏற்கனவே அறிவித்துவிட்டனர். ராமர் கோயில் கட்ட ஆரம்பிக்கும் திகதி பின்போடப்பட்டாலும் அது இன்றைய அரசால் எந்த வகையில் கையாளப்படும் என்பது தெளிவாகவில்லை. ஏற்கனவே பாரதிய ஜனதாவின் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்திற்கு வி.பி. சிங் செல்லமாட்டேன் என்று அடம்பிடித்திருந்தார்.



இவ்வருட மத்தியில் நடைபெறும் வடமாநில தேர்தல் வரையிலுமாகிலும் இக்குடுமிச் சண்டைகள் தள்ளப்பட்டுக் கொண்டே போகலாம். இதனால் அரசிற்கும் பாரதிய ஜனதாவிற்குமே இலாபம். வட மாநில தேர்தல்களின் பின்னர் தேசியமுன்னணிக்கு வெற்றி வாய்ப்பு கூடுதலாக இருந்தால், அரசாங்கம் உடனடியாக உடைவது தவிர்க்கப்படலாம். இவ்வெற்றி வாய்ப்பு பாரதிய ஜனதாவின் பக்கம் கூடுதலாக இருந்தால் (மாநிலங்கள் ஜனதாவின் கையில்), அரசுக்கு சிக்கல்கள்கூடுதலாக இருக்கும். ஒரு வேளை வெற்றிவாய்ப்பு காங்கிரஸ் பக்கமாக இருந்தால் தேசிய முன்னணியின் நடவடிக்கைகளை மக்கள் ஏற்கவில்லை என்பதுடன் காங்கிரஸ் கட்சியை மக்கள் முற்றாக நிராகரிக்கவில்லை என்பதாகவும் அமைந்துவிடும். இந்த நிலமை உருவானால் குறிப்பிடக்கூடிய பாராளுமன்ற அங்கத்தவர்களை கட்சி மாறிகள் ஆக்கும். ஒரு வேளை நாடு இன்னுமொரு தேர்தலை சந்திக்கக்கூடி வேண்டிவரலாம்.

அதே நேரத்தில் ராஜீவ் காந்தியின் '21 ஆம் நூற்றாண்டை நோக்கி இந்தியாவை நகர்த்துதல்' என்பது எந்தளவுக்கு நடைமுறைப்படுத்தப்பட்டது? ஆரம்பகாலத்தில் அவர் ஓர் பரிசுத்தமானவராகத் தோன்றினாலும் காலஞ் செல்லச்செல்ல அதில் சந்தேகத்தையே தோற்றுவித்தது. ஆரம்பகாலத்தில் அயல்நாடுகளான பாகிஸ்தான், சீனா, பங்களாதேஷ் போன்ற நாடுகளுடன் நல்ல உறவுகளைக் கொண்டதுடன் உள்நாட்டிலும் தொழில் நுட்பத்திற்கு [illegible]ன்னுரிமை கொடுத்தார். தொழில் நுட்பவல்லுனர்களையும், அதிகாரிகளையும், [illegible] கலந்தாலோசித்தார். அரசாங்கத்திலிருந்த இந்திராவினதும், சஞ்[illegible]ந்தியினதும் ஆட்களை எல்லாம்

(தொடர்ச்சி 40ம் பக்கம்)

# ஆண்கள் விற்பனைக்கு

— ஒரு விமர்சனம் —

ப.வி. ஸ்ரீரங்கன்

படைப்பிலக்கியத்தை "Second nature of life" என்பார்கள். அதாவது, "வாழ்கையில் இரண்டாவது இயற்கை" என்று சமுதாயவியலாளர்கள் கூறுகிறார்கள். ஆனால் இன்னும் சில இலக்கியத்திறனாய்வாளர்கள், இலக்கியத்தை வாழ்க்கையைக் காட்டும் கண்ணாடியென்பார்கள்; இவ்விரண்டாவது வாதம் கொச்சையானது போல் தெரிகிறது. ஏனெனில் மனிதனின் பிம்பத்தை அப்படியே பிரதிபலிக்கும் கண்ணாடி, மனிதனின் சிந்தனை ஓட்டத்தை பரிணாமத்தைக் காட்டமுடியுமா?; முடியாது!

ஆயினும் ... இலக்கியத்தை "வாழ்கையில் இரண்டாவது இயற்கை" எனும் வாதம்; மானிட வாழ்வின் போக்கை பிரதிபலித்தல் எனும் போக்கில் ஓரளவு சரிதாம். எனினும் மனித சிந்தனைப்போக்கில் நிகழும் "இயக் கியல்" ரீதியிலான பரிணாமத்தை இவை எதுவும் புரிந்து கொள்ளா.

எனவே, "இலக்கியம், மானுடசிந்தனைப் போக்கின் பரிணாமம்" அல்லது, வெளிப்பாடு என்று கூறலாம் என்று யோசிக்கிறேன். இதுவும் முழுமைபெறவில்லை. இதுபற்றிய பார்வையை இன்னும் ... இன்னும் ஆழமாகச் சிந்தித்து பிற்காலத்தில் வெளிக்கொணர முயற்சிக்கிறேன்.

இப்போது, மேற்கு ஜெர்மனியில் எழுதும் இளம் எழுத்தாளர்களில் என் புருவத்தை உயரப்பண்ணியவர் என, நண்பன் பார்த்திபன். இவருடைய "இலக்கியப் பங்களிப்பு மிகவும் விரிவுடையதாக இருக்கின்றமையால் எங்கள், புருவங்களை உயர்த்துமபடி செய்கிறார். இவரது, "ஆண்கள் விற்பனைக்கு" என்ற நாவலை சமீபத்தில் தாம் ஆறுதலாகப் படிக்கும் வாய்ப்புக்கிடைத்தது எனக்கு! ஆனால், இந்நாவல் "ஸ்ருட்காட் மாநகரில்" நடந்து முடிந்த இலக்கியச்சந்திப்பில் பலர் விமர்சித்தார்கள்.



ஒரு சிலர், பார்த்திபனின் முன்னைய நாவல்களைவிட இது தரத்தில் வளர்ச்சியடையவில்லையென்றும், புத்தகம் பார்ப்பதற்கு நன்றாக இருப்பதாகவும் கூறினார்கள். இன்னும் சிலர், பேச்சு மொழியில் பாத்திரங்கள் உரையாடுவதையும்; அதில் வரும் கிராமவழக்கு சொல்பிரயோகங்களேயுமே விமர்சித்தார்கள். ஆனால், நான் ஆண்கள் விற்பனை நாவலை சிறு மதிப்பீடு செய்யமுனைகிறேன்.

ஆண்கள் விற்பனையின் கரு, தமிழ் பேசும் சமூகம்-என்ன-முழுஇந்திய வழிமுறைகளின் சீர்கேட்டை அவர்களின் அழுகல் நாற்றத்தை அடிப்படையாகக் கொண்டது; "சீதனப்பிரச்சனை எப்போதும் நடுத்தரவர்க்கப் பிரச்சனை" என்ற, நண்பர் கலைச்செல்வத்தின் வாதத்தை நான் வழிமொழிகிறேன். இந்த சிக்கலான முரண்பாட்டை கையிலெடுத்துக்கொண்டு, கதாசிரியர் தன் காலத்தைக் கடக்கமுனையும்போது அவர் கொண்டிருந்த சமூகக் கொள்கை-மனோபாவம் இரண்டிற்கும் இடையிலுள்ள இணக்கமான விழிப்புணர்ச்சிதாம் "ஆண்வர்க்கம், பெண்வர்க்கம்" என்ற தேடலுடன் படையலை முன்வைக்கிறார். இதுசரியா அல்லது தவறாயென்பதை காலத்தின் கையில் விட்டுவிடுகிறேன்.

மேலும், "வெயிலில் கறுத்து, உழைப்பால் உரமேறிய உடம்புகள் தோட்டங்களில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டிருந்தன. வேலைகளின் போது மட்டும் பெண்களுக்குச் சமவுரிமை கிடைத்திருந்தது" என்று உலகத்தின் பார்வைக்கு சுட்டிக்காட்டுகிறான் பார்த்திபன். வரிவடிவில் உருவாகும் இலக்கியம் சிந்தனைப் பீடத்தில் குடிபுகுகிறது. இந்த கருத்துக் கலவையுடன் கட்டப்படும் இலக்கிய கட்டமைப்பைத் தாங்கிப்பிடிப்பது மனிதநேயமாகும். எனவே, மனிதநேயத்தை அதன் சதவிகதத்தில் நிறைதீப் படைக்கப்படும் இலக்கியம், குறைகள் பல இருப்பினும் சாரம்சத்தில் சிறப்புடையதாகும். இந்த மனிதநேயம் மேல்எடுத்துக் காட்டிய

பார்த்திபனின் வசனத்தில் கால்பரப்பி நிற்பதை இலகுவாக உணர்ந்து கொள்ளலாம். நாவலின் பல இடங்களிலும் அப்படிப்பட்ட நோக்கு நிறைந்து காணப்படுவது அவனது மானுட நேசிப்புக்கு முத்திரையாகும். "எல்லா விசயங்களும் மிகுந்த கரிசனையுடன் விவாதத்திற்குப் பொறுக்கப்பட்டிருந்தன. எல்லோரும் தங்கள் வீட்டுக்கதவுகளை பத்திரமாக மூடிவிட்டு அடுத்த வீடுகளின் திறப்புத் துவாரங்களின் ஊடாகப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்" என்று கூறுகிற இடத்தில் தமிழ்பேசும் சமூகத்தின் மொத்த பண்பையும் சாடி, குறைபாட்டை உடைத்து நொருக்கி தமிழ்சமூகம், தன்னை, பற்றி சிந்திக்கத் தூண்டுகிறான். இங்கு வெறும் விபரம் இலக்கியமாகக் கனிந்து நிற்பதைக் காண்கிறோம். இதே இலக்கிய நயம், கனககந்தரத்தின் நிலைமைகளை வெளிபடுத்தும் பலஇடங்களில் மிளிரக்காண்கிறோம்.

"மூவருமே ஒரே இடத்தில் வேலை செய்தாலும், மூவரும் ஒன்றாகப் பகிரங்கமாகச் சிரித்துக் கதைக்ககூடாது. இது சமூகத்தின் கட்டளை. இதை மீறுபவர்களுக்கு பல்வேறு கதைகள் கட்டப்படுவதுடன், வேறு பெயர்களும் உண்டாக்கப்படும்." என்று கூறும்பொழுது மரபுவழி கருத்தியல்களையும், இதனுடாக வளர்த்தெடுக்கப்பட்ட பிற்போக்குவாத தமிழ்சமூகத்தின் எண்ணஓட்டத்தையும் புரட்சிகரமான உத்வேகத்தோடு சாடித்தள்ளுகிறான்.

பார்த்திபன், தனது "ஆண்கள் விற்பனைக்கு" நாவலில், கருத்துக்களையும், சிந்தனைகளையும் அலையலையாகத் தோற்றுவிக்கிறான்; புரட்சிகரமாக விமர்சிக்கிறான்; ஆவேசத்துடன் கைகளை நீட்டி சமுதாயத்தின் மரபுவழிச் சிந்தனைகளை, குற்றஞ்சாட்டவும் அவன் தயங்கவில்லை.

சமுதாயத்தின் சீர்கேடான விவரங்களை ஒரு கோணத்தில் சில கதாபபாத்திரங்களின் மூலம் சந்திக்க வைக்கிறான்; முரண்பாடுகள் தெரிகிறது. அந்த முரண்பாட்டில், தான் சொல்லவந்த கருத்தை பத்மா



என்ற கதாப்பாத்திரத்தின் மூலம் அனாயாசமாகச் சொல்லிவிட்டு போகிறான்; சபாஷ் பார்த்திபா!

நாவலின் இருப்பத்தைந்தாவது அத்தியாயத்தில் நிகழும் பத்மாவினதும், தவபாலனினதும் உரையாடல்கள் அகவாழ்விலும் புறவாழ்விலும் இரண்டு வேசம் போடும் "சாபக்கேடான மனித ஜன்மங்களினது" போக்கை அலசி ஆராய்ந்து பத்மாவின் ஆவேச வெளிப்பாடகச் சுட்டிக்காட்டி எழுச்சியுடைய பண்புகளை முக்கியப்படுத்தி அறிவுரை கூறுகிறான்.

முப்பத்திரண்டாவது அத்தியாயத்தில் "உமா மெல்ல மெல்ல மனதைத் திடமாக்கிக் கொண்டிருந்தாள்; உறுதி என்ற கற்களைப் பொறுக்கி எதிர்காலம் என்ற அத்திவாரத்தைப் போடஆரம்பித்தாள்" என்று கூறும்பொழுதும் சரி, "இந்த உலகத்தில், இந்த நாட்டில், ஏன் இந்த ஊரில ஒவ்வொருவருக்கும் செய்யிறத்துக்கு எவ்வளவோ காரியங்கள் இருக்கு; ஒவ்வொருதற்றை கண்ணுக்கு முன்னாலயும் எவ்வளவோ பிரச்சனைகள் இருக்கு; மனுஷரைக் கேவலமாக்குகிற சமுதாயச் சீர்கேடுகள் ஏராளமாய் இருக்கு; கல்யாணம் முடிச்ச ஒவ்வொருத்தரும் தானும் தன்ர குடும்பமுமாய் இருந்தால், இதையெல்லாம் ஆர் செய்யிறது?" என்று கேட்கின்றபோதும்சரி, இங்கு யதார்த்தத்திற்கு வேண்டிய தீவிரமான "மனிதநேயம்" முழுமை பெறுவதைக் காண்கிறோம். யதார்த்தமென்பது , எதிர்மறையான விடயத்தில் அதனை வெற்றிக் கொள்ளும் மானுட முயற்சியில் ஊக்கமான செயலுடன் இணைவதாகும். இந்த வகையில் தனது, "ஆண்கள் விற்பனைக்கு நாவல்" மூலம் பார்த்திபன் வாழ்க்கையை யதார்த்த அர்த்தங்களுடன் சித்தரிக்கிறான்; தனிமனிதர்களின் செயற்பாடுகளிலும், முரண்பாடுகளிலும், நல்ல அம்சத்தைப் பிறருக்கு உணர்த்துகிறான்.

பத்மலிங்கத்தின் மகளுக்கு திருமணம் செய்து வைக்கவேண்டுமென்ற, உணர்விலுள்ள நியாயமான பிரதிபலிப்பையும், கனககந்தரத்தின் சீதனக்கல்யாணத்தால், அவர்படும் இன்னல்களையும் கோடிட்டு

சொல்லமுடியும். இவையெல்லாம் அவன் சமகாலப் பார்வையுடன் நின்று விடாமல் எதிர்காலத்தையும், அதன்மீது வலுவான ஆரோக்கியமான பார்வையும் செலுத்துவதைக் காணக்கூடியதாகவுள்ளது. தவபாலனின் எழுத்தும், அவனது பிற்காலத்திய போக்கும் சமூக வாழ்க்கைக்கு தன்னை அர்ப்பணித்துக் கொள்ளாத ஒரு படைப்பாளியின் இயக்கப்பாட்டை படம் பிடித்துக் காட்டத்தவறவில்லை.

உமா, பத்மா இவர்களுடைய கடைசி முடிவின் மூலம், மனிதர்களானவர்கள் தங்களை சமூகவாழ்க்கையுடன் இணைத்துக்கொள்வதன் மூலமே வாழ்க்கையுடன், தம்மை முழுமைப்படுத்த முடியுமென்றும்; தோன்றிக்கொண்டிருக்கும் வரலாற்றில் நாமெல்லாம் ஒவ்வொருபாத்திரம் என்பதையும் நாசுக்காகச் சொல்லுகிறான்.

இந்த வகையில் "ஆண்கள் விற்பனைக்கு நாவலில்" கருத்துப் பரிபூரண வளர்ச்சி மட்டுமல்ல கலாபூர்வமான வளர்ச்சியும் தொக்கிநிற்கிறது.

---

(35ம் பக்கத் தொடர்ச்சி)

வெளியேற்றினார். கிழமைக்கொரு தரம் மக்களைச் சந்தித்தார். மக்கள் குறைகளை அதிகாரிகளினூடாக நிறைவேற்றினார். 77 இல் இந்திராவை எதிர்த்த அரசியல்வாதிகள் பத்திரிகையாளர்கள் எல்லோரும் ராஜிவை முழுமையாக நம்பினார்கள். பஞ்சாப் பிரச்சனை, அஸ்லாம் பிரச்சனை போன்றவை தீர்க்கப்படும் என்ற தோற்றத்தை உருவாக்கினார். ஆனால் இவையெல்லாம் நடப்பில் இருக்கும் பொழுதே தொழில் நுட்ப வல்லுனர்களை விலக்கி தன் பள்ளி நண்பர்களை ஆலோசகர்களாக்கினார். நாளடைவில் இந்திராவினதும், சஞ்சேயினதும் அடிவருடிகளைப்போல் தனக்கும் அடிவருடிகளை உருவாக்கிக் கொண்டார்.

மொத்தத்தில் இத்தேர்தலில் பெரும்பகுதி மாநிலங்களில் இருந்த ஆளுங்கட்சி, எதிர்கட்சி அரசுகள் அப்புறப்படுத்தப்பட்டுள்ளன. மத்திய அரசு மாற்றப்பட்டுள்ளது. ஆட்சிக்கு மேலிருந்த அதிருப்தியை மக்கள் எதிர்ப்பு வாக்குகள் மூலம் வெளிப்படுத்தியுள்ளார்கள்.



## 7வது இலக்கியச்சந்திப்பு

நடைபெறும் இடம் : கிறேபெல்ட்

காலம்: ஏப்பிரல் 7ம் திகதி 1990.

சகல தொடர்புகளுக்கும்:

**K.SIVASOTHY**
**BIRKENSTR.8**
**5830SCHWELM**

## புதிய சஞ்சிகைகள்

அமுதம் (சிறுவர் சஞ்சிகை)
Sinna Rajeswaran
"AMUTHAM"
Gladbacherstr.16,
5013 Elsdorf(RHLD)

அக்னி
AGNI
Alleenstr. 17,
7144 Asperg.

ஓசை
R.Rajagobal,
5 Rue Hermel,
75018 PARIS,
FRANCE.

தளிர்
Arbeitsgemeinschaft für Auslanderfragen
H.M.Schleyerstrasse 15
7032 Sindelfingen

# சர்வதேச சங்கீத சுரத்தட்டு

எழுதியவர் : எம். பி. கோணேஷ்

கொழும்பு தமிழ்ச் சங்க நூலகம்

புத்தாண்டு வெளியீடு
2ம் 3ம் 4ம் பாகங்கள்

எமது பாரம்பரிய கர்நாடக சங்கீதத்தினை ஆதாரமாகக் கொண்டு இத்தாலியைப் பிறப்பிடமாகக் கொண்ட சர்வதேச சங்கீதமுறையில் முற்றிலும் புதியபாணியில் எழுதப்பட்டு வரும்

## புதுமைப் படைப்பு

இந்தப் புத்தகத்தின் உதவியுடன் சுயமாகவோ அல்லது சர்வதேச சங்கீதத்தினை முறைப்படி பயின்ற ஒரு ஆசிரியரின் உதவியுடனோ ஒரு சுரத்தட்டினை Key Board மிகவும் குறுகிய காலத்தில் கற்றுணர்ந்து கொள்ளலாம்.

* 18 பாடல்கள் (இடையிசையுடன்)
* ஒரு சுரத்தட்டினை பூரணமாகக் கற்றுக் கொள்ளக் கூடிய சகல விடயங்களும்
* கர்நாடக ராகங்கள்
* சர்வ தேச சங்கீதமும் கர்நாடக இசையும்

தொடர்புகளுக்கு
M.P.KONEZH
SCHÜTZENDELLE 2
4052 KORSCHEN BROICH 3
WEST GERMANY
TEL : 02182/59052